## நாணய வங்கித் தொழில் அபிவிருத்திகள்

### பணநிரம்பல்

தொடர்ந்துவந்த இரு ஆண்டுகளாக பண நிரம்பலில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்புக்களுக்குப்பின் நாணய விரிவு வீதத்தில் ஏற்பட்ட கணிசமானளவு வீழ்ச்சியே 1978ஆம் ஆண்டு நாணயப் போக்குகளின் பெரும் பண்பாகும். நாணயத்தையும், பொதுமக்கள் வசமுள்ள கேள்வி வைப்புக்களையும் கொண்ட பண நிரம்பல் இவ்வாண்டின்போது ரூ. 5,700 இலட்சத்தால் அல்லது 11 சதவீதத்தால் அதிகரித்தது. இதை 1976ஆம் 1977ஆம் ஆண்டுகளின் முறையே 35,29 சதவீத ஆண்டு அதிகரிப்புடன் ஒப்பிட்டு நோக்கலாம். ஆண்டுதோறும் பண நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு, 1977ம் ஆண்டு முழுவதிலும் அதனிலும் சென்ற ஆண்டின் தொடர்பான மாத அளவுகளிலும் பார்க்க 25 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் 1978ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மட்டுமே இவ்வதிகரிப்பு விளங்கியது. அட்டவணை 1.15 இல் கவனித்தவாறு 1978ஆம் ஆண்டு நாணய விரிவின் ஆண்டு வீதம் சனவரியில் 35 சதவீதத்திலிருந்து படிப்படியாக யூலையில் 14 சதவீதமாக வீழ்ச்சியுற்று, அதன்பின் இவ்வளவில் ஓரளவு நிலையாக விளங்கியது. ஆயினும் 1978 திசெம்பரில் இது மேலும் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியைப் பதிவு செய்து, 11 சதவீத மட்டத்தினை அடைந்தது. நாணய விரிவு வீத வீழ்ச்சியைக் குறைவாக மதிப்பீடுசெய்யின் 1977இல் 2.1 சதவீதமாக விளங்கிய பண நிரம்பலின் மாதாந்தச் சராசரி உயர்வு 1978இல் 0.9 சதவீதமாகக் குறைவுற்றிருக்கையில் மாதாந்தச் சராசரி அதிகரிப்புக்கள் சென்ற ஆண்டின் தொடர்பான மட்டங்களிலும் பார்க்க 32 சதவீதத்திலிருந்து 20சதவீதமாக வீழ்ச்சியுற்றன.

அட்டவணை 1.15

**பணநிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்கள் 1976 — 1978**

| கால முடிவில் | பண நிரம்பல் ப. இ. ரூ. | | | மாதாந்த மாற்றம் % | | | முன்னைய ஆண்டிற்கு மேலாக சதவீத மாற்றம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1976 | 1977 | 1978 | 1976 | 1977 | 1978 | 1975 மேலாக 1976 | 1976 மேலாக 1977 | 1977 மேலாக 1978 |
| சனவரி .. | 3,127 | 4,203 | 5,679 | + 0.3 | + 0.9 | + 5.8 | + 6.4 | + 34.4 | + 35.1 |
| பெப்புருவரி ... | 3,213 | 4,429 | 5,830 | + 2.7 | + 5.4 | + 2.7 | + 9.7 | + 37.9 | + 31.6 |
| மாச்சு ... | 3.391 | 4,710 | 6,001 | + 5.5 | + 6.3 | + 2.9 | + 11.4 | + 38.9 | + 27.4 |
| ஏப்பிறல் ... | 3,516 | 4,764 | 6,025 | + 3.7 | + 1.2 | + 0.4 | + 15.4 | + 35.5 | + 26.4 |
| மே ... | 3,582 | 4,808 | 5,876 | + 1.9 | + 0.9 | —2.5 | + 20.5 | + 34.2 | + 22.2 |
| யூன் ... | 3,728 | 4,947 | 5,864 | + 4.1 | + 2.9 | - 0.2 | + 23.2 | + 32.7 | + 18.5 |
| யூலை ... | 3,666 | 4,893 | 5.570 | — 1.7 | — 1.1 | - 5.0 | + 23.0 | + 33.5 | + 13.8 |
| ஒகத்து ... | 3,851 | 4.912 | 5,523 | + 5.1 | + 0.4 | - 0.8 | + 31.3 | + 27.5 | + 12.4 |
| செத்தெம்பர் ... | 3,889 | 5,024 | 5,804 | + 1.0 | + 2.3 | + 5.1 | + 28.9 | + 29.2 | + 15.5 |
| ஒற்ரோபர் .. | 3,988 | 5,062 | 5,835 | + 2.5 | + 0.7 | + 0.5 | + 30.9 | + 26.9 | + 15.3 |
| நவெம்பர் ... | 4,019 | 5,254 | 5,955 | + 0.8 | + 3.8 | + 2.1 | + 31.9 | + 30.7 | + 13.3 |
| திசெம்பர் ... | 4,166 | 5,366 | 5,936 | + 3.7 | + 2.1 | - 0.3 | + 34.9 | + 28.8 | + 10.6 |
| மாதாந்தச் சராசரி ... | 3,678 | 4,864 | 5,825 | + 2.5 | + 2.1 | + 0.9 | + 22.4 | + 32.5 | + 20.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அரசதுறையின் நிதித் தொழிற்பாடுகளிலிருந்து ஏற்படும் சுருக்கமும், வங்கியல்லாத் தனியார்துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட மிகக் கணிசமானளவு உயர்வுமே நாணய விரிவு வீத வீழ்ச்சியின் முக்கிய அடிப்படைக் காரணிகளாகும். இவ்வாண்டில், அரசிறையும், விரிவுற்ற கடன் பாட்டுமூலங்களும் மொத்தச் செலவிலும் பார்க்க மேலதிகமாக விளங்கின. இதன் விளைவாக மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்களிலும் கணக்குகளிலும் (தேறிய) ஏற்பட்ட மாற்றங்கள் உட்பட அரசதுறைத் தொழிற்பாடுகள் பணநிரம்பலின் மீது ரூ, 15,200 இலட்சம் கொண்ட சுருக்கத்தாக்கத்தினை விளைவித்தன. மறுபுறம், இவ்வாண்டில் தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடனில் ரூ. 30,000 இலட்சத்திற்குச் சிறிது மேலான தொகை கொண்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டபோதிலும், இத்துறைத் தொழிற்பாடுகளின் விரிவுத்தாக்கம் இத்துறையில் பெருமளவு ஏனைய தனியார் துறைப் பகுதிகளின் தவணை சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட மிகக் கணிசமானளவு அதிகரிப்பினுல் ரூ. 6,880 இலட்சத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்டு விளங்கியது இவ்வாறு தவணை சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு இவ்வாண்டில் கடைப்பிடித்த கூடிய வட்டிவீதக் கொள்கையே காரணமாகும்.

1978இன் நாணயப் போக்குகள் நாணய வளர்ச்சியில் பருவகாலத்தின் சில தன்மைகள் மீளத் தோன்றியமையை எடுத்துக்காட்டுவன போல் தோன்றுகின்றன. பொதுவாக கூட்டுறவு நிலையங்களுக்கான வங்கி கொடுகடன் ஒவ்வோர் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் ஓரளவு பெருமளவாக உயர்வுற்று அதே போன்று நான்காம் காலாண்டில் பெருமளவால் வீழ்ச்சியுறுவது வழக்கம். 1978இல் இத்துறைக்கான வங்கிக் கொடுகடன் யூனில் ரூ 19,220 இலட்சமாக உயர்வுற்று ஆனுல் திசெம்பரில் ரூ. 16,750 இலட்சமாக வீழ்ச்சியுற்றது மீட்சி பெற்ற பொருள் வரவுகளை இல்லாமல் செய்யும்வரை நெல் சந்தைப்படுத்தல் சபையின் சார்பில் ரூ. 2,970 இலட்சத்தொகையையும் முந்திக் கிடைக்கவேண்டிய ஒரு பகுதி பொருள் வரவுகளுக்காக மேலும் ரூ 1,710இலட்சத்தையும் வர்த்தகவங்கித்துறை தொங்கல் கணக்கில் வைத்திருந்திராதிருந்தால், இத்துறை வங்கிக் கொடுகடன் போக்கின் பருவகாலத்தன்மை மேலும் குறிப்பிடத்தக்கதாக இருந்திருக்கும். இறுதிக்காலாண்டில் முதிர்ச்சி பெற்ற பொருள் வரவுகளின் அளவு அதிகமாகவிருந்தமையால் இவ்வாண்டுத் தொங்கல் கணக்கிலுள்ள தொகை அதிகரித்திருந்தது. இது இவ்வாண்டின் முதல் அரைப் பகுதியில் அதிகமானளவு நெற் கொள்வனவுகள் செய்யப்பட்டமையைக் காட்டுகின்றது எனினும் இத்துறைக்கு வங்கி வழங்கிய கொடுகடனில் காணப்பட்ட பருவகாலத்தன்மையின் போக்குகள், எதுவித பருவகாலத் தன்மையினின்றும் விடுபட்ட ஏனைய துறைகளின் தன்மையினுல் முற்றும் தடைப்பட்டது. இரண்டாவது காலாண்டை விட, குறிப்பாக எல்லாக் காலாண்டுகளிலும் பெருமளவு அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களின் வளர்ச்சியும், நான்கு காலாண்டுகளில் ஒவ்வொன்றிலும் கணிசமானளவு சுருக்கத்தாக்கங்களை விளைவித்த அரசதுறை நிதித்தொழிற்பாடுகளின் தாக்கமும் இவ்வாண்டுப் பணநிரம்பலின் வளர்ச்சியில் ஏற்படக்கூடிய ஏதாவ பருவகாலப் போக்கைத் தடைசெய்தன.

1978 ஆம் ஆண்டு நாணய விரிவின் உள்ளடக்கமும் இவ்விரிவுக்குப் பொறுப்பாயுள்ள அடிப்படைக் காரணிகளும் அட்டவணை 1.16 இல் காட்டப்பட்டுள்ளன. இல்வாண்டில் வங்கியல்லாத் தனியார் துறையின் கேள்வி வைப்புக்கள் ரூபா 3,470 இலட்சத்தால் உயர்வுற்றிருக்கையில், பொது மக்கள் வச

அட்டவணை 1.16

## பணநிரம்பலிலும் ஏதுக்காரணிகளிலும் ஏற்பட்ட மாற்றங்கள்–1976–1978

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1975 முடிவிற்குமேலாக 1976ன் இறுதி | 1976 முடிவிற்குமேலாக 1977ன் இறுதி | 1977ன் முடிவிற்குமேலாக 1978ன் இறுதி |
|---|---|---|---|
| 1. உள்ளடக்கம் | | | |
| 1.1 கேள்வி வைப்புக்கள் | + 607 | + 489 | + 347 |
| 1.2 நாணயம் | + 471 | + 711 | + 224 |
| 2. பணநிரம்பலில் தேறிய மாற்றம் | + 1077 | + 1200 | + 570 |
| 3. பகுப்பு | | | |
| 3.1 வெளிநாட்டு வங்கிச் சொத்துக்கள் (தேறிய)* | + 470 | + 1943 | + 1523 |
| 3.2 தனியார் துறை | + 70 | — 70 | + 688 |
| 3.2.1 வர்த்தக வங்கிக் கொடுகடன் | | | |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கு | + 43 | + 614 | + 693 |
| கூட்டுறவுகளுக்கு | + 113 | + 568 | + 443 |
| ஏனைய தனியார் துறைக்கு | + 427 | + 618 | + 1890 |
| 3.2.2. தவணை சேமிப்பு வைப்புக்கள் | | | |
| அரச கூட்டுத்தாபனங்களின் | + 42 | — 294 | — 200 |
| கூட்டுறவுகளின் | — 21 | — 45 | — 54 |
| ஏனைய தனியார் துறைகளின் | — 487 | — 856 | — 1351 |
| 3.2.3 வர்த்தக வங்கிகளின் ஏனைய சொத்துக்கள் பொறுப்புக்கள் (தேறிய) | — 46 | — 676 | — 733 |
| 3.3 அரசதுறை | + 541 | — 676 | — 1520 |
| 3.3.1. வர்த்தக வங்கி கொடுகடன் | + 367 | + 132 | — 113 |
| 3.3.2. மத்திய வங்கிக் கொடுகடன் | + 363 | — 187 | + 38 |
| 3.3.3. வங்கி வைப்புகளும் பண நிலுவைகளும் | — 273 | — 223 | — 1050† |
| 3.3.4. மத்திய வங்கியின் ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும் (தேறிய) | + 83 | — 398 | — 304 |
| 3.4 இடைப்போக்கிலுள்ள விடயங்கள் | — 3 | + 4 | — 121 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பணநிரம்பலில் ஏற்படுத்திய தாக்கத்தை இக்குறிகள் காட்டுகின்றன.


* இப்பகுப்பிலிருந்து எதிர்ப்பதிவுகளுடன் கூடிய மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்களையும் கணக்குகளையும் (தேறிய) கொண்ட செலாவணிநிதி மாற்றங்களால் அமைந்த வெளிநாட்டு சொத்துக்களிலேற்பட்ட மாற்றங்களால் நீக்கப்பட்டுள்ளன. 1977, 78ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் முறையே + ரூ. 16,550 இலட்சமும் + ரூ. 3,610 இலட்சமுமாகும்.

† தேசிய அபிவிருத்தி வங்கிக்காக அரசினால் மத்திய வங்கிக்கு மாற்றல் செய்யப்பட்ட ரூ. 3,900 இலட்சம் கொண்ட தொகையை உள்ளடக்குகின்றது.

முள்ள நாணயம் ரூபா 2,240 இலட்சத்தால் உயர்வுற்றன. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களின் பெருமளவு அதிகரிப்பும், தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடனின் விரிவுமே 1978 ஆம் ஆண்டுப் பண நிரம்பலின் வளர்ச்சிக்கான முக்கிய காரணிகளாகும். இதுவே வெளிநாட்டுத்துறை பண நிரம்பலின் மீது குறிப்பிடத்தக்களவு விரிவுத் தாக்கத்தை விளைவித்த தொடர்ந்து வந்த மூன்றாவது ஆண்டாகும். 1976, 1977 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 4,700 இலட்சம், ரூபா 19,430 இலட்சம் கொண்ட அதிகரிப்பு

## பண நிரம்பல்

**1966–73 இறுதி எண்தொகைகள், 1974 தொடக்கம் மாத இறுதி எண்தொகைகள்**





பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம். மூலம்: இலங்கை மத்திய வங்கி.

*பண நிரம்பல் என்பது, ''வர்த்தக வங்கிகள், அரசு நீங்கலாக பொது மக்களின் உடைமையான எல்லா நாணயங்களும் கேள்வி வைப்புக்களும் ஆகும்''*

## பண நிரம்பலின் மூலங்கள்

***1966 – 73 இறுதி எண்தொகைகள், 1974 தொடக்கம் மாத இறுதி எண்தொகைகள்***




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம். மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இக்கோட்டுப்படம் இலங்கையிலுள்ள பண நிரம்பலின் மூலத்தைக் காட்டுகின்றது.

(அ) "அரச நிதி" .. அரசின் ரூபா பண உடமைகள் நீங்கலாக, அரசின் மீதான வங்கித் தொழில் முறை உரிமைகளைக் காட்டுகின்றது.

(ஆ) ''பொதுமக்களுக்குக் கொடுகடன்'' .. தனியார்துறை மீது தவணை, சேமிப்பு வைப்புக்கள் நீங்கலாக வங்கித் தொழில்முறை உரிமைகளைக் காட்டுகின்றது.

தேறிய வெளிநாட்டு வங்கிச் சொத்துக்கள் எதிராக இருக்கும் வேளைகளில், மொத்தப் பண நிரம்பற் கோடு அரச நிதியை மட்டுப்படுத்தும் கோட்டிற்குக் கீழே காணப்படுகிறது.

1977 சனவரி முதல் பன்னாட்டு ஒதுக்கு மீளப் பெறுமதியிடல் கணக்கில், எதிர்ப் பதிவுகளுடன் அமைந்த செலாவணி வீத மாற்றத்தினால் ஏற்படும் வெளிநாட்டு வங்கிச் சொத்துக்கள் தவிர்க்கப் பட்டுள்ளன.

களைப் பதிவு செய்த வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் (செலாவணி வீதங்களின் மாற்றங்களுக்கு இடம்விட்டபின்) 1978 இல் ரூபா 15,230 இலட்சத்தால் மேலும் உயர்வுற்றன. இவ்வதிகரிப்பின் முக்கிய பங்கு வழக்கம் போல் மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. வங்கி வெளிநாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சிக்கு சென்மதி நிலுவையின் மூல தனக் கணக்கிற்குக் கிடைக்கக்கூடியதாயிருந்த அதிகரித்த மூலவளங்களே முற்றிலும் காரணமாகும். இறக்குமதிகள் தளர்த்தியமைமையயும், 1977 நவெம்பர் நடுப்பகுதி தொடக்கம் செய்யப்பட்ட கொடுப்பனவுகளை ஓரளவு பிரதிபலித்து நடைமுறைக் கணக்கு கணிசமானளவு பணக்குறையைப் பதிவு செய்த போதும், மூலதனக் கணக்கில் கிடைக்கக்கூடிய மூலவளங்கள் இப் பணக் குறையை ஈடுசெய்வதற்குப் போதியளவு மேலாகவிருந்ததுடன் இம்மிகை இந் நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களின் நிலையை வலுப்படுத்தியது.

அரச கூட்டுத்தாபனங்களும் கூட்டுறவு நிலையங்களும் உட்பட தனியார் துறைக் கொடுக்கல் வாங்கல்கள் ரூபா 700 இலட்சம் கொண்ட சுருக்கத் தாக்கத்தை விளைவித்த 1977ஆம் ஆண்டு அனுபவத்திற்கு முழு மாறாக 1978இல் இத்துறைத் தொழிற்பாடுகள் பண நிரம்பலின் மீது ரூபா 6,880 இலட்சம் கொண்ட அளவிற்கு விரிவுத்தன்மை வாய்ந்தனவாகவிருந்தன. இத்துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடனின் ரூபா 30,260 இலட்சம் கொண்ட மிகப் பெருமளவு அதிகரிப்பு இவ்வளர்ச்சிக்கான முக்கிய காரணியாக விளங்கியது. இவ்வாண்டின்போது ''ஏனைய தனியார் துறைப்'' பகுதிகளுக்கான வங்கிக் கொடுகடன் குறிப்பிடத் தக்களவு ரூபா 18,900 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில், அரச கூட்டுத்தாபனங்களுக்கும் கூட்டுறவு நிலையங்களுக்குமான கொடுகடன் முறையே ரூபா 6,930 இலட்சத்தாலும்; ரூபா 4,430 இலட்சத்தாலும் உயர்வுற்றது. ஆகவே சென்ற ஆண்டில் பண நிரம்பலின் மீது சுருக்கத்தை விளைவித்த ''ஏனைய தனியார் துறை'', 1978 ஆம் ஆண்டு தவணை சேமிப்பு வைப்புக்களில் ரூபா 13,510 இலட்சம் கொண்ட கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டபோதும் ரூபா 5,390 இலட்சம் கொண்ட விரிவுத் தாக்கத்தை விளைவித்து இவ்வாண்டில் தனது நிலையை மாற்றியமைத்தது. இத்துறையில் வங்கிக் கொடுகடனில் ஏற்பட்ட பெருமளவு உயர்விற்கு 1977 நவெம்பரில் பொருளாதாரக் கொள்கை மீளமைத்தமையைத் தொடர்ந்து தேவைப்பட்ட அதிகரித்த கொடுகடனையே காரணமாகக் கூறலாம்.

1978 இல் அரச கூட்டுத்தாபனங்களின் கொடுகடன் தொழிற்பாடுகள் ரூபா 4,930 இலட்சம் கொண்ட விரிவுத் தாக்கத்தை விளைவித்தன. இதற்கு வர்த்தக வங்கிகளிலிருந்து பெற்ற கடன்பாடுகளின் ரூபா 6,930 இலட்சம் கொண்ட அதிகரிப்பே காரணமாகும். இவ்வதிகரிப்பு இவற்றின் தவணை சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட ரூபா 2,000 இலட்சம் கொண்ட உயர்வினால் ஓரளவு குறைக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டு இக்கூட்டுத்தாபனங்களுக்கான அதிகரித்த வங்கிக் கொடுகடன் எந்த ஒரு தனி ஆண்டிலும் பதியப்பட்ட ஆகக்கூடிய தொகையைக் காட்டுகின்றது. இவ்வதிகரிப்பின் முக்கிய பங்கு இவ்வாண்டின் முதல் அரைப் பகுதியில் நடைபெற்றது. முதல் அரை ஆண்டின் உயர்வு இரண்டாம் அரை ஆண்டின் ரூபா 1,540 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 5,390 இலட்சமாக விளங்கியது. இரண்டாம் அரைப் பகுதியில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்கு இக்காலப்பகுதியில் நடைமுறையிலிருந்து கொடுகடன் உச்சவரம்புகளின் தடைசெய்யும் தாக்கத்தையே ஓரளவு காரணமாகக் கூறலாம். இவ்வாண்டின்போது வங்கித் துறையில் அரச கூட்டுத்தாபனங்கள்

அதிகமாகத் தங்கியிருந்தமைக்கு இறக்குமதிகள் தளர்த்தியமையைத் தொடர்ந்து அதிகமான இறக்குமதிப் பொருட்களைக் கொள்வனவு செய்தமை ஓரளவு காரணமாகவும், சில கூட்டுத்தாபனங்களுக்கு அதிகமான தொழிற் படும் மூலதனம் தேவைப்பட்டமை ஓரளவு காரணமாகவும் இருக்கலாம்.

சென்ற ஆண்டு ரூபா 5,680 இலட்சம் கொண்ட என்றுமில்லாததோர் அதிகரிப்பைப் பதிவுசெய்த கூட்டுறவு நிலையங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் 1978இல் மேலும் ரூபா 4,430 இலட்சம் கொண்ட உயர்வைக் காட்டியது. சென்ற ஆண்டைப் போன்று இவ்வதிகரிப்பின் முக்கியபங்கு ரூ.3,490 இலட்சத்தைப் பதிவுசெய்த உத்தரவாதவிலைத் திட்டத்தின்(உ.வி.தி.) கீழான கொள்வனவுகளுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் தொடர்பானவை யாகும். திசெம்பர் இறுதியில் முதிர்ச்சிபெற்ற பொருள் வரவுகளை இல்லாமல் செய்யும்வரை நெல் சந்தைப்படுத்தல் சபையின் சார்பில் வங்கித்துறை ரூ.2,970 இலட்சம் கொண்ட தொகையை வைத்திருந்தமையால் இவ்வதிகரிப்பு உண்மை நிலையை எடுத்துக்காட்டுவதிலும் பார்க்க பெரும்பாலும் புள்ளி விப ரத்தன்மையதாகவே அமைந்தது. இத்தொகைக்கு இடம்விட்டு நோக்கின் இவ்வாண்டில் உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் (உ. வி. தி.) முற்பணங்களின் தேறிய அதிகரிப்பு உண்மையில் மிகச் சிறியளவினதாகவே இருந்திருக்கும். ஆயினும் முதிர்ச்சி பெறும் பொருள் வரவுகளுக்கு ஈடுகொடுப்பதற்காகவும், தாங்கிருப்புகளை வைத்திருப்பதற்காகவும் 1978 இன் இறுதிக் காலாண்டில் திறைசேரியிலிருந்து ரூபா 3,400 இலட்சம் கொண்ட தொகையை மாற்றம் செய்தமையால் உ. வி. தி. கொள்வனவுகளை நிதியிடுவதில் திருந்திய செய லாற்றம் உருவாகத் துணைநின்றது. பயிர்ச் செய்கைக் கடன்களும் ஏனைய கடன்களும் முறையேரூபா 490 இலட்சத்தாலும் ரூபா 450 இலட்சத்தாலும் அதிகரித்தன. இத் துறையினுல் பயன்படுத்தப்பட்ட வங்கிக் கொடுகடன் தொகையில் நல்ல தோர் தாக்கத்தை ஏற்படுத்திய மற்றைய முக்கிய கொள்கை முடிவு யாதெனில், 1978 ஒற்ருேபரில் நடைமுறைக்கு வந்த கடனைத் திருப்பிக் கொடுக்கத்த வறியமையை ஒட்டி மீளப்பெறப்பட்ட 75 சதவீதம் கொண்ட உத்தரவா தமாகும்.

வெளிநாட்டுத் துறையிலும், தனியார் துறையிலும் ஏற்பட்ட போக்கு களுக்கு முழுமாருக, 1978 இல் அரசதுறைத் தொழிற்பாடுகள் பண நிரம் பலின் மீது கணிசமானளவு சுருக்கத் தாக்கத்தை விளைவித்தன. முழுமையாக நோக்கின் மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புகளும் கணக்குகளும் (தேறிய) உட்பட வங்கித் துறையுடனுன அரச நிதித் தொழிற்பாடுகள் பண நிரம்பலின் மீது ரூபா 15,200 இலட்சம் கொண்ட சுருக்கத் தாக்கத்தை விளைவித்தன. இதுவே அரச நிதித் தொழிற்பாடுகள் பண நிரம்பலின் மீது குறிப்பிடத்தக் களவு சுருக்கத் தாக்கத்தை விளைவித்த இரண்டாவது தொடர்ந்து வந்த ஆண் டாகும். இது வங்கித்துறை வசமுள்ள அரச வைப்புக்களின் அதிகரிப்பினது ஒருமித்த விளைவாகும். முழுவனே இவ்வாண்டின்போது வங்கித்துறை வசமுள்ள அரசின் வைப்புக்கள் ரூபா 10,500 இலட்சம் கொண்ட என்றுமில்லாததோர் அதிகரிப்பைப் பதிவுசெய்தன. ஆயினும், இது தேசிய அபிவிருத்தி வங்கியின் மூலதனத்திற்கு அரசின் உதவுதொகையாக மத்திய வங்கியில் வைப்புச் செய் யப்பட்ட ரூபா 3,900 இலட்சம் கொண்ட தொகையை உள்ளடக்குகின்றது. இவ்வாண்டில் அரசிற்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ரூபா 1,130 இலட் சத்தால் வீழ்ச்சியுற்றிருக்கையில், மத்திய வங்கியிலிருந்து பெற்ற கொடுகடன் ரூபா 380 இலட்சத்தால் உயர்வுற்று அரசிற்கான வங்கிக் கொடுகடனில்

ரூபா 750 இலட்சம் கொண்ட தேறிய குறைப்பைப் பதிவுசெய்தது. இக் கொடுக் கல்வாங்கல்கள், மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புகளிலும் கணக்குகளிலும் (தேறிய) ஏற்பட்ட ரூபா 3,940 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் சேர்ந்து இவ்வாண்டில் அரசதுறை பண நிரம்பலில் ரூபா 15,200 இலட்சம் கொண்ட மொத்தச் சுருக்கத் தாக்கத்தை விளைவித்தது.

சுருங்கக்கூறின் வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களின் கணிசமானளவு உயர்வும், தனியார் துறைக்கான வங்கிக் கொடுகடனின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புமே 1978ஆம் ஆண்டு நாணய விரிவின் முக்கிய அடிப்படைக் காரணி களாகும். ஆயினும் அரச துறையிலிருந்து எழுந்த கணிசமானளவு சுருக்கம் வங்கியல்லாத் தனியார் துறையினால் சேகரிக்கப்பட்ட குறிப்பிடத்தக்களவு தவணை சேமிப்பு வைப்புக்களுடன் சேர்ந்து இவ்வாண்டின் நாணய விரிவை மட்டுப்படுத்த உதவின. இச்சார்பான போக்குகள் நடைபெற்றிராவிடின் நாணய விரிவு வீதத்தில் இம்மிகவும் விரும்பத்தக்க வீழ்ச்சி மேலும் பின் தள்ளப் பட்டிருக்கும். ஆயினும் இவ்வீழ்ச்சி நடைபெறு முன்னர் ஏற்கெனவே நாணய விரிவு ஏற்பட்டதன் காரணமாக ஆண்டு முழுவதிலும் விலைகளின் மீது குறிப் பிடத்தக்களவு அமுக்கம் ஏற்பட்டது. இது இறக்குமதித் தளர்த்தலைத் தொடர்ந்து இறக்குமதிகளின் உள்ளோட்டத்தினால் ஓரளவு மட்டுப்படுத்தப் பட்டது.

### வர்த்தக வங்கித் தொழில்

1978 ஆம் ஆண்டில் மூன்றாவது தடவையாக வர்த்தக வங்கிகளின் மூல வளங்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது. இவ்வாண்டில் மொத்த மூலவளங்களிலேற்பட்ட அதிகரிப்பு 1976 இன் 24 சதவீதத்துடனும், 1977இன் 56 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் ரூ.35,850 இலட்சமாக அல்லது 35 சதவீத மாயிருந்தது. அண்மை ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட தன்மைக்கேற்ப 1978 இன் கட்டியெழுப்பப்பட்ட வைப்புக்களிலேற்பட்ட வளர்ச்சியே முக்கிய காரணியாக விளங்கியது. வைப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பில், தவணை சேமிப்பு வைப்புக்கள் முக்கிய பங்கினைக் கொண்டிருந்தன. இது1977 இன் வட்டி வீதத்திருத்தத்தினைத் தொடர்ந்து வங்கித் தொழில் முறையில் தவணை சேமிப்பு வைப்புக்கள் பெருமளவு மேல்நோக்கிய போக்கொன்றினைப் பதிவுசெய்தன. இது முன்னைய ஆண்டில் தொடங்கிய சாதகமான போக்கின் தொடர்ச்சியாகும். மூலவளச் சேர்க்கை செலுத்தப்பட்ட மூலதனம் ஒதுக்கு நிதியங்கள், பகிரப் படாத இலாபங்கள், வங்கிகளுக்கிடையிலான கடன்பாடுகள், வெளிநாட்டுக் கடன்பாடுகள்,ஏனைய பொறுப்புக்கள்ஆகியவற்றிலேற்பட்ட அதிகரிப்புக்களினால் மேலும் உயர்த்தப்பட்டது. அதைவிட வங்கியல்லாத் தனியார்துறைக்கான கொடுகடன் கேள்வியின் அதிகரிப்பு மேலும் கூடியதாகவிருந்தது. மொத்தத் தில் வங்கியல்லாத் தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் இவ் வாண்டில் முன் எப்போதுமில்லாதவாறு ரூ.30,260 இலட்சத்தால் அதிகரித்தது. மொத்த வைப்புக்களுக்கான கடன்களினதும் மேலதிகப்பற்றுக்களினதும் விகி தத்தை 1977 இன் 69 சதவீதத்திலிருந்து 1978 இல் 80 சதவீதத்துக்கு உயர்த் தியது. இதன் விளைவாக அதிகளவாக மூலதனங்கள் சேர்க்கப்பட்ட நிலையிலும் வர்த்தக வங்கிகளின் திரவத் தன்மை 1978 இறுதியில் ஓரளவு வீழ்ச்சியுற்றது. இது கேள்வி வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதத்தில் 88 சத வீதத்திலிருந்து 85 சதவீதமாயும், மொத்த வைப்புக்களுக்கான திரவச் சொத் துக்களின் விகிதத்தில் 44 சதவீதத்திலிருந்து 37 சதவீதமாயும் ஏற்பட்ட

மிகத்தெளிவான வீழ்ச்சிகளைக் கொண்ட திரவ விகிதங்களில் பிரதிபலிக்கப்பட்டது. அத்துடன் 1977 இறுதியில் பெரும்பாலும் நடைமுறையிலல்லாத வங்கி வீதத்தில் மத்திய வங்கியிலிருந்து பெற்ற வர்த்தக வங்கிக் கடன்பாடுகள் (தண்டனை வீதத்தில்) 1978 இறுதியில் ரூ. 2,550 இலட்சம் ரூபாய்களாக விளங்கின.

முன்குறிப்பிட்டபடி வர்த்தக வங்கி மூலவளங்கள் 1978 இல் ரூ. 35850 இலட்சத்தால் அதிகரித்தன. அதிகரிக்கப்பட்ட மூலவளங்கள் "ஏனைய உள்நாட்டுத் தனியார்துறை" அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியனவற்றிற்கு இடமளிப்பதற்கும், வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களை நிதியிடுவதற்கும் பயன்படுத்தப்பட்டன. எல்லாமாக ஏனைய தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ரூ.18,900 இலட்சத்தால் அதிகரித்தது. எனினும் இத்துறைக்கான மூலவளங்களின் தேறிய வெளிப்பாய்ச்சல் வங்கித் தொழில் முறையுடனான இத்துறையின் வைப்புக்களில் ரூ. 15,400 இலட்சத்தாலேற்பட்ட அதிகரிப்பின் காரணமாக ரூ. 3,500 இலட்சத்துக்குக் கட்டுப்படுத்தப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கைகளைத் தொடர்ந்து அத்துறைக்குப் பயன்படுத்தப்பட்ட உயர்ந்த அளவிலான மூலவளங்களின் பயன்பாடானது இத்துறையின் உயர்மட்ட நடவடிக்கையை எடுத்துக் காட்டுகின்றது. அரச கூட்டுத்தாபனங்கள் வர்த்தக வங்கிகளிடமிருந்து ரூ 6,930 இலட்சத்தைப் பெற்றன. ஆயினும், அவற்றின் தேறிய மூலவளப்பெறுகை வர்த்தக வங்கிகளினுடனான வைப்புக்களில் ரூ. 4,110 இலட்சத்தாலேற்பட்ட அதிகரிப்பினால் ரூ. 2,820 இலட்சத்துக்குக் குறைக்கப்பட்டது. கூட்டுறவு நிறுவனங்களும் மூலவளங்களை மிகப் பெரிய அளவில் பயன்படுத்தின. ஆண்டு காலப் பகுதியில் தேறிய அதிகரிப்பு ரூ. 4,520 இலட்சமாயிருந்தது. வங்கித் தொழில் முறைக்குள் மூலவளங்களின் பயன்பாடு ரூ.4,670 இலட்சமாக விளங்கி நிலையான, ஏனைய சொத்துக்கள், கைப்பணம் ஆகியவற்றின் அதிகரிப்புக்கள் வடிவிலமைந்தன. அட்டவணை 1.17 வர்த்தக வங்கிகளின் மூலவளங்களையும், பயன்பாட்டையும் தேறிய அடிப்படையில் தொகுத்துத் தருகிறது.

அட்டவணை 1.17

## வர்த்தக வங்கிகளின் மூலவளங்களிலும் அவற்றின் பயன்பாட்டிலும் ஏற்பட்ட மாற்றங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1975/ இறுதி 1976 இறுதி | 1976/ இறுதி 1977 இறுதி | 1977/ இறுதி 1978 இறுதி |
|---|---|---|---|
| 1. அரசு ... | -104.9 | 25.6 | 220.8 |
| 2. மத்திய வங்கி ... | -251.2 | 197.6 | 126.1 |
| 3. அரச கூட்டுத்தாபனங்கள் ... | 182.8 | -197.3 | -282.0 |
| 4. கூட்டுறவு நிறுவனங்கள் ... | -27.7 | -474.9 | -451.8 |
| 5. ஏனைய தனியார் துறை ... | 332.2 | 546.1 | -350.5 |
| 6. வங்கிகளுக்கிடையிலானவை ... | 34.3 | 541.0 | 722.3 |
| 7. வெளிநாட்டுத் துறை ... | -165.0 | -637.7 | 15.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**வங்கிக் கிளை விரிவாக்கம்**

மீளாய்வுக்குரிய ஆண்டுக் காலத்தில் வர்த்தக வங்கிகளின் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1977 இல் 76 கொண்ட அதிகரிப்புடனொப்பிடின் 22 ஆல் அதிகரித்தது. கிளை விரிவாக்கம் இலங்கை வங்கிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதுடன் இரு அரச துறை வங்கிகளுக்கிடையில் சமமாகப் பகிரப்பட்டது. இவ்வாண்டில் இலங்கை வங்கி 11 புதிய முழுக்கிளைகளைத் திறந்ததுடன், 1978 இறுதியில் முழுக்கிளை அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை 90 ஆக விளங்கியது. இவ்வாண்டில் புதிய வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் திறக்கப்படாததுடன் மொத்தம் 390 ஆக இருந்தது. இவ்வாறு 1978 இறுதியில் இலங்கை வங்கி கிளை அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை 480 ஆக விளங்கியது. மக்கள் வங்கி இவ்வாண்டில் 11 புதிய கிளைகளைத் திறந்து 1978 இல் இறுதியில் இதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கையை 216 ஆக்கியது. 1978 இல் தேசிய சேமிப்பு வங்கி 2 கிளை அலுவலகங்களைத் திறந்து அதன் கிளைகளின் மொத்த எண்ணிக்கையை 27 ஆக்கியதுடன் புதிய கிளைகள் கொழும்பு மாவட்டத்திலேயே இருந்தன.


1977 ஆம் ஆண்டறிக்கை அண்மைய ஆண்டுகளில் வங்கித் தொழிலமைப்பின் விரைவான விரிவாக்கத்தையொட்டிப் பல விடயங்களைக் கவனத்திற்குக் கொண்டு வந்தது. இவற்றினுள் தொலைவிலுள்ள கிராமப்பகுதிகளில் அமைந்துள்ள கிளைகளின் பாதுகாப்புப் பிரச்சினையும் ஒன்றாகும். 1978 இல் பல சிறிய வங்கிகள் கொள்ளையிடப்பட்டபொழுது இது மிகப் பாரதூரமான பிரச்சினையாக மாறியது. இதன் விளைவாக 97 கிளைகளின் (இவற்றுள் 81 வேளாண்மைப் பணி நிலையங்களாக இருந்தன) தொழிற்பாடுகள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு அவற்றின் அலுவல்கள் பெரும் பாதுகாப்புக்கருதி அண்மையிலுள்ள நகரங்களுக்கு மாற்றப்பட்டன.

**வட்டிவீதங்கள்**

1977ஆம் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டதுபோல் ''1977இல் இலங்கையின் வட்டிவீதக் கொள்கையில் ஏற்பட்ட அடிப்படை மாற்றத்தின் விளைவாக பொருளாதாரத்தில் நிலவிய பரவலான பணவீக்க அழுக்கத்தின் பின்னணிக்கு மாறாக குறிப்பிடத்தக்க உயர்மட்ட வீதங்களுக்கு வட்டி நகர்ந்து சென்றது'', எடுத்துக்காட்டப்பட்ட மாற்றங்கள் வங்கி வீதத்தில் ஏற்பட்ட மேனோக்கிய திருத்தம், தேசிய சேமிப்பு வங்கியின் வைப்பு வீதங்களில் ஏற்பட்ட மிகப்பெரிய அதிகரிப்பு ஆகியவையாகும். இவை ஏற்படுத்திய சமாந்தர மாற்றங்கள் வர்த்தக வங்கி வைப்பு வீதங்களிலும், திறைசேரி உண்டியல் வீதத்தின் மேலெழுந்த அசைவிலும், வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன்களிலும், வர்த்தக வங்கிகளின் கடன் வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் நீண்டகாலக் கொடுகடன் நிறுவனங்களின் கடன் வழங்கிய வீதங்கள் ஏறக்குறைய மாற்றமற்ற நிலையில் இருந்தமையிலும் பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

## பண வீதங்கள்

### காலாண்டு இறுதி எண்தொகைகள்




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1978 காலப்பிரிவில் வட்டி வீதங்களின் மட்டத்திலோ அல்லது அமைப்பிலோ குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இருக்கவில்லை. வங்கி வீதம், திறைசேரி உண்டியல் வீதம் ஆகிய இரண்டும் மாற்றமின்றி முறையே 10 சதவீதமாகவும் 9 சதவீதமாகவும் இருந்தன. வர்த்தக வங்கிகளினுல் தவணை, சேமிப்பு வைப்புக்களின் மீது வழங்கப்பட்ட வீதங்களிலோ அல்லது அவற்றின் கடன்கள் அல்லது முற்பணங்கள் மீது அறவிடப்பட்ட வீதங்களிலோ எவ்வித மாற்றங்களும் இருக்கவில்லை. இவ்வாண்டுப்பிரிவில் தேசிய சேமிப்பு வங்கியில் தவணை, சேமிப்பு வைப்புக்களின் வட்டிவீதங்கள் பெருமளவில் மாற்றமின்றி இருந்தன. ஆனுல் இவ்வாண்டில் தேசிய சேமிப்பு வங்கியில் இருந்து வந்த வசதிகளில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. இவை 1978 யூலை 2இலிருந்து ஓராண்டு தவணை வைப்புக்கள் மீது 14.4 சதவீத மாதாந்த வட்டிக் கொடுப்பனவையும், 1978 ஒற்ரேபர் 1இலிருந்து ஆகக்குறைந்தது ரூ. 5,000 கொண்ட வைப்பு என்பதற்கிணங்க 18 மாத வைப்புக்கள் மீது 16.8 சதவீதப்படியான கொடுப்பனவையும் உள்ளடக்கியது. 1978 ஒற்ரேபர் 1 இலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ. 100,000 க்குக்கூடிய வைப்புக்களின் மாதாந்த வட்டி 15 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கியும் 1978 யூலை 2க்குப்பின் மேற்கொள்ளப்பட்ட புதிய தவணை வைப்புக்களின் மீது அத்தகைய வைப்புக்கள் முதிர்ச்சியடையாத நிலையில் மீளப்பெறப்படும் பொழுது வட்டியில் பகுதியை கொடுப்பனவு செய்யப்படுமென அறிவித்தது. அது வரையில் தவணை வைப்புக்கள் முழுமையாக முதிர்ச்சியடையாத நிலையில் மீளப்பெறப்படின் வட்டியை முற்ருக இழக்க வேண்டிய நிலை இருந்தது. அரச ஈட்டு வங்கியினதும், அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினதும், தேசிய வீடமைப்புத் திணைக்களத்தினதும் வழங்கல் வீதங்கள் 1978இல் மாற்றமின்றியிருந்தன. மத்திய வங்கியின் நடுத்தர, நீண்டகால தவணைக் கொடுகடன் நிதியத்தின் கடன் வழங்கல் வீதங்களில் எவ்வித மாற்றமும் இருக்கவில்லை. 1977 நவெம்பரில் 3 சதவீத புள்ளி அதிகரிப்பைப் பதிவுசெய்த வேளாண்மைக் கைத்தொழில் கொடுகடன் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் வீதங்கள் 1978 யூனில் ஒரு சதவீத எல்லையளவால் வீழ்ச்சியடைந்தன. வழங்கல் வீதத்தில் அவதானிக்கப்பட்ட இன்னெரு மாற்றம் 1978 மேயிலிருந்து தேசிய சேமிப்பு வங்கியினுல் கட்டிடக்கடன்கள் ஏனைய கடன்கள் ஆகியவற்றில் ஏற்படுத்தப்பட்ட ஒரு சதவீதப் புள்ளி அதிகரிப்பாகும். 1977 செத்தெம்பரில் 9 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அரச முறிகளின் (10-12 ஆண்டு முறிகள்) வீதம் இவ்வாண்டில் மாற்றமின்றிருந்தது. வங்கிகளிடையான அழைப்புக்கடனின் வீதத்திலும் எதுவித மாற்றமும் பதிவுசெய்யப்படாத போதிலும் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் இச்சந்தையில் நடைமுறையிலுள்ள வீதத்தை ஆகக்கூடிய அளவுக்கு 9.5 சதவீதமாக உயர்த்தும் வகையில் அதிகரித்த அமுக்க அறிகுறிகள் காணப்பட்டன.

ஆண்டு முழுவதிலும் வர்த்தக வங்கிகளின் வழங்கல் வீதங்கள் உயர்வாயிருந்த போதிலும், தனியார் துறைக்கான கொடுகடனுக்கான கேள்வி தேவையற்ற முறையில் தடுக்கப்பட்டதென்பதற்கு எதுவித சான்றும் இல்லை. உண்மையில் தனியார் துறைக்கான வங்கிக்கொடுகடன் 1978இல் முன்னெப்போதுமில்லாத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. கொடுகடனின் கேள்வியில் உயர்வட்டிவீதங்கள் ஏதாவது பாதக விளைவை ஏற்படுத்தி இருப்பின் இறக்குமதிகள் தாராளமாக்கப்பட்டதனுலும் வியாபாரத்திற்கேற்ற சூழ்நிலை நிலவியமைபோன்ற சார்பான காரணிகளால் முழுமையாக மூழ்கடிக்கப்பட்டது.

1977இன் வட்டிவீதச் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அபிவிருத்தி, நிறுவனத்துறையினுல் திரட்டப்பட்ட வைப்புக்களின் வீதத்தில் மிகப்பெரிய அதிகரிப்பை ஏற்படுத்தியது. 1977 திசெம்பருடன் முடிவடைந்த 4 மாத காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளுடனுன வங்கியல்லாத் தனியார்த்துறையின் மொத்த தவணைச் சேமிப்பு வைப்புக்கள் ரூ. 5,130 இலட்சத்தால் அதிகரித்தன. ஒப்பிடுகையில் ஆண்டின் முதல் 8 மாதங்களில் ரூ. 6,130 இலட்ச அதிகரிப்பையும் 1976இல் ரூ. 4,660 இலட்ச அதிகரிப்பையும் கொண்டிருந்தன. வர்த்தக வங்கிகளினுல் வைப்புக்களைத் திரட்டுவதிலேற்பட்ட அதிகரிப்பு 1978இல் தொடர்ந்தும் இருந்ததோடு ஆண்டு முடிவில் மொத்த சேகரிப்பு ரூ. 15,720 இலட்சமாக இருந்தது. இவ்வாண்டில் அவதானிக்கப்பட்ட நாணய விரிவின் வீதத்திலேற்பட்ட மிக விரும்பத்தக்க வீழ்ச்சியை அடைவதற்கு குறிப்பிடத்தக்க காரணி யாதெனில் வைப்புக்களைத் திரட்டுவதில் ஏற்பட்ட வெற்றிதரும் அதிகரிப்பே ஆகும்.

**மத்திய வங்கித் தொழில்**

முன்னைய ஆண்டில் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு ரூபா 49,630 இலட்சம் அல்லது 76 சதவீதத்தால் அதிகரிப்பைப் பதிவு செய்த மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள் / பொறுப்புக்கள் 1978இல் மேலும் ரூபா 27,110 இலட்சம் அல்லது 23 சதவீதத்தால் உயர்ந்தன. முன்னைய ஆண்டின் தன்மையைப் போலவே கூடியளவு உயர்வு வெளிநாட்டுச் சொத்துக்களிலே காணப்பட்டது. எல்லாமாக வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் (பன்னுட்டு ஒதுக்கு) ரூபா 18,060 இலட்சத்தால் அதிகரித்த வேளையில் உள்ளூர் சொத்துக்கள் ரூ. 9,050 இலட்சத்தால் உயர்ந்தன. இவ்வாண்டு காலத்தில் பன்னுட்டு ஒதுக்கில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய பகுதி பன்னுட்டு நாணய நிதியத்துடனுன கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் கிடைத்தது. இவ்வாண்டில் தேறிய எடுப்பனவுகள் ரூபா 3,480 இலட்சமாக இருந்த வேளையில் பொறுப்பாண்மை நிதியக் கடன் சார்பாகப் பெறப்பட்ட நாணயம் ரூபா 7,780 இலட்சமாக இருந்தது. இவையும் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கின் குறைக்கு மேலாக நீண்டகால மூலதன உள்ளோட்டமும் இவ்வாண்டில் வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் குறிப்பிடத்தக்களவில் உயர உதவின.

1978இல் வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்களில் விரிவிற்கு ''ஏனைய சொத்துக்களிலும் கணக்குகளிலும்'', வர்த்தக வங்கிகளுக்கு வழங்கிய முற்பணக் கணக்கிலும் ஏற்பட்ட அதிகரிப்பே அடிப்படைக் காரணிகளாக இருந்தன, எல்லாமாக 1978இல் ஏனைய சொத்துக்களும், கணக்குகளும் ரூபா 6,760 இலட்சத்தால் உயர்ந்தன. ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் [1] கீழான கோரிக்கைகளின் ரூபா 2,640 இலட்சம் கொண்ட அதிகரிப்பும், அரசின் சார்பில் வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் பெறுமதி ரூபா 2,670 இலட்சம் கொண்ட அதிகரிப்பும் ஏனைய சொத்துக்களின் உயர்விற்கு உதவிய முக்கிய

---

1. ஆசிய தீர்ப்பனவு ஒன்றியமானது இலங்கை, இந்தியா, பாக்கித்தான், நேபாளம். ஈரான் வங்காளதேசம், பர்மா, ஆசிய உறுப்புரிமை நாடுகளுக்கிடையிலான கொடுப்பனவுகளைத் தீர்க்க உதவும் ஒரு அமைப்பாகும். இந்த அமைப்பின் கீழ் ஒரு உறுப்பு நாட்டின் கொடுபட வேண்டிய கொடுப்பனவுகள் பன்முக அடிப்படையில் வரவுகளுக்கு எதிராக கொடுப்பனவுகள் மூலமும் தேறிய நிலுவைகள் மாதத்திற்கு இருமுறை இடைவெளியிலும் தீர்க்கப்பட முடியும். வெளிநிற்கும் நிலுவைகள் எதிர்காலத் தீர்ப்பனவு மூலமும் மத்திய வங்கியின் ஏனைய சொத்துக்கள் பொறுப்புகளின் காலம் தாழ்த்திய பதிவின் மூலமும் தீர்க்கப்படும்.

காரணிகளாக இருந்தன. ஏனைய விடயங்களில் ரூபா 4,120 இலட்சம் கொண்ட அரசிற்கான தற்காலிக முற்பணங்கள் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களை இவ்வாண்டில் காட்டின. ஒப்பு நோக்குகையில் மத்திய வங்கி வைத்திருந்த அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ரூபா 3,000 இலட்சத்தாலும், அரசிற்கான சிறப்புக் கடன்கள் ரூபா 730 இலட்சத்தாலும் வீழ்ந்தன. இந்த மாற்றங்களின் விளைவு யாதெனில் இவ்வாண்டு காலத்தில் அரசிற்கான மத்திய வங்கியின் கொடுகடனில் ரூபா 380 இலட்சம் கொண்ட தேறிய அதிகரிப்பு ஏற்பட்டதேயாகும். முன்னைய ஆண்டில் ரூபா 4,960 இலட்சமாக இருந்த வங்கியின் வர்த்தக வங்கிகளுக்கான கடன் வழங்கல்கள் மிகப் பெருமளவாக 1978இல் ரூபா 1,910 இலட்சத்தால் அதிகரித்தன.

வெளிநாட்டுச் சொத்துக்களில் பெருமளவு பிரதிபலிக்கப்பட்ட அதிகரிப்புகளைக் கொண்ட, சொத்துக்களின் பண்புகளுக்கு மாறாக 1978இல் மத்திய வங்கியின் பொறுப்புக்கள் உள்நாட்டுப் பொறுப்புக்களுக்கு முழுதாக மட்டுப்படுத்தப்பட்டன. முன்னைய ஆண்டைப் போலவே 1978இல் உள்நாட்டுப் பொறுப்புக்களில் அதிகரிப்பிற்கு வங்கியின் "ஏனைய பொறுப்புக்களில்" ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணியாக இருந்தது. 1977இல் ரூபா 30,840 இலட்சங்களால் அதிகரித்த "ஏனைய பொறுப்புக்கள்" 1978இல் ரூபா 13,440 இலட்சங்களால் மேலும் அதிகரித்தது. "ஏனைய சொத்துக்களின்" கீழ் எதிர்ப்பதிவைக் கொண்டதும் அரச சார்பில் வழங்கப்பட்டதுமான உத்தரவாதங்களின் பெறுமதியில் (ரூ. 2,670 இலட்சம்) ஏற்பட்ட அதிகரிப்பும் சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒதுக்கீடுமே (ரூ. 3,750 இலட்சம்) இப்பொறுப்புக்களின் வளர்ச்சிக்குப் பெரும் காரணிகளாகும். "ஏனைய பொறுப்புக்களின்" உயர்வை அடுத்து, 1978இல் கூடிய அதிகரிப்பைக் காட்டிய மற்றொன்று வைப்புக்கள் ஆகும். இந்த ஆண்டில் மத்திய வங்கியுடன் வைக்கப்பட்டிருந்த மொத்த வைப்புக்கள் ரூபா 14,730 இலட்சங்களால் உயர்ந்திருந்தது. இது கூடுதலாக அரச துறை வைப்புக்களில் பிரதிபலிக்கப்பட்டதுடன் அது ரூபா 9,470 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் கொண்டிருந்தது. கடந்த ஆண்டில் ரூபா 8,120 இலட்சம் அதிகரிப்பைப் பதிவு செய்த வங்கியின் நாணய வழங்கல் 1978இல் ரூபா 2,890 இலட்சம் அதிகரிப்பைக் கொண்டிருந்தது. நாணய வழங்கலில் உள்ள குறிப்பிடத்தக்க மெதுவான அதிகரிப்பு இந்த ஆண்டில் ஏற்பட்ட நாணய விரிவாக்க வீதத்தின் குறிப்பிடத்தக்க தேய்வின் பிரதிபலிப்பாகும்.

1978 இல் மத்திய வங்கியின் பொறுப்புக்களின் குறிப்பிடக்கூடிய மாற்றமானது வெளிவாரிப் பொறுப்புகளின் தேறிய வீழ்ச்சி ரூபா 850 இலட்சங்களாகும். இந்த ஆண்டில் வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பைக் கவனத்திற் கொண்டால் வெளிநாட்டுப் பொறுப்புக்களின் இந்த வீழ்ச்சி சிறிதாக இருந்தாலும் ஆண்டில் உருவாகிய நாட்டின் வலுவான சென்மதி நிலுவை நிலையை மேலும் பெரிதுபடுத்துகின்றது. மொத்தத்தில் 1978இல் மத்திய வங்கியின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வளர்ச்சி அமைப்பானது, ஏனையவர்களின் சார்பாகப் பொறுப்பேற்கப்பட்ட பொறுப்புக்களுடன் சொத்துக்களின் அதிகரிப்பின் முக்கிய பங்கு நிதியீட்டம் செய்யப்படும் போது ஒரு சிறிய பங்கு மட்டுமே வங்கியின் பொறுப்புக்களை மாற்றீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதென்பதைக் காட்டுகின்றது. இதன் கருத்து யாதெனில் வங்கியின் சொத்துக்களின் வளர்ச்சியிலிருந்து வெளியாகும் விரிவாக்க உந்தலானது சொத்துக்களின் மொத்த வளர்ச்சியிலும் பார்க்க கணிசமானளவு குறைவாக உள்ளது.

**கிராமியக் கொடுகடன்**

அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழும் கிராமிய வங்கிகள் திட்டத்திலும் கமநலப் பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கித் துணை அலுவலகங்களினூலும் வழங்கப்பட்ட கொடுகடனையும் உள்ள டக்கிய மொத்தக் கொடுகடன் 1977 இல் ரூபா 4,480 இலட்சங்களிலிருந்து 1978 இல் ரூபா 3,200 இலட்சங்களாக 29 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இந்த ஆண்டு வழங்கப்பட்ட கடன்களில் ரூபா 2,540 இலட்சம் அல்லது 29 சதவீதம் பயிர் செய்கைக்கு வழங்கப்பட்டது. மொத்தக் கடன் தொகையில் பெரிய பங்காகிய ரூபா 1,480 இலட்சம் அல்லது 46 சதவீதம் மக்கள் வங்கியால் வழங்கப்பட்டது. இலங்கை வங்கித் துணை அலுவலகங்களின் பங்கு ரூபா 1,420 இலட்சம் அல்லது 44 சதவீதம் ஆகும்.

நெற் செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்கள் ரூபா 1,770 இலட்சம் அல்லது மொத்த கொடுகடனில் 55 சதவீதமாக விளங்கியதுடன் இதில் பெரும் பகுதி அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. கரும்பு, பருத்திச் செய்கைகளுக்காக வழங்கப்பட்ட கடன்களின் பங்கு ரூபா 160 இலட்சம் அல்லது 5 சதவீதமாக விருந்த வேளையில் துணை உணவு பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்ட கடன் ரூபா 610 இலட்சம் அல்லது 19 சதவீதம் ஆகும். கிராமிய வங்கிகள், வேளாண்மைப் பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கித்துணை அலுவலகங்கள் என்பவற்ருல் பலதரப்பட்ட தேவைகளுக்கு அதாவது வீடுகட்டல், மின்னூட்டல் நீர் வழங்கல் என்பவற்றிற்காக வழங்கப்பட்ட கடன்கள் ரூபா 170 இலட்சங்களாகும். இலங்கை வங்கியின் துணை அலுவலகங்களால் பொறிகளையும் கருவிகளையும் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட கடன்கள் 1977இல் ரூபா 10 இலட்சங்களிலிருந்து 1978இல் ரூபா 300 இலட்சங்களுக்கு கணிசமாக அதிகரித்தது.

ஆண்டு இறுதியில் 1978/79 இன் முடிவுருத பெரும் போகத்திற்கான அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் நெற் செய்கைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன் ரூபா 230 இலட்சங்களாக இருந்தது. இது கடந்த ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் கொடுக்கப்பட்ட கொடுகடன் ரூபா 2,930 இலட்சங்களில் ஒரு பகுதியாகும். இதே போல் துணை உணவுப் பயிர்கள், கரும்பு, பருத்தி ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்கள் 4 மடங்கிற்கும் கூடிய வீழ்ச்சியைப் பதிவு செய்தன. பெரும் போகம் கிட்டத்தட்ட ஏப்பிறல் வரை தொடர்ந்திருப்பதால் முழுப்போகத்திற்குமான வழங்கிய மொத்த தொகை எல்லையளவில் கூடுதலாக இருக்கலாம். ஆனல் கடந்த ஆண்டு பெரும் போகத்திலும் பார்க்கக் கணிசமானளவு குறைவாக இருந்தது.

1977இல், 1977/78 பெரும் போகத்திற்காகக் கொண்டு வரப்பட்ட கடன் பெறுவதற்கான தகைமைத்தன்மை தளர்த்தப்பட்டதன் காரணமாக அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வேளாண்மைக் கடன்களில் பெருமளவு அதிகரிப்பு ஏற்பட்டது. இவ்வதிகரிப்பு திறமையான மீளப் பெறும் திட்டத்துடன் சேர்ந்திராத காரணத்தால் இதே போகத்திற்காக வழங்கப்பட்ட கடன்களைத்திருப்பிச் செலுத்தாமையில் கூடிய வீதம் பதியப்பட்டது. இதனல் 1978இல் வேளாண்மைக் கடன்களின் திருப்பிச் செலுத்தத் தவறிய வீதம் கணிசமாக அதிகரித்தது. புதிய வேளாண்மைக்

கொடுகடன் திட்டம் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து அனைத்தையும் உள்ளடக்கிய கொடு கடன் திட்டத்தையும் அடுத்து 1977/78 பெரும் போகம் வரை வங்கிப் பிரிவினால் கொடுக்கப்பட்ட நெல் கடன்களின் தொகை ரூபா 10,890 இலட்சங்களாகும். இத் தொகையில் ரூபா 6,170 இலட்சம் அல்லது 56 சதவீதம் 1978 ஆம் ஆண்டு இறுதியில் திருப்பிக்கொடுக்கத் தவறிய தொகையாக இருந்தது.

அட்டவணை 1.18

## கிராமியக் கொடுகடன் திட்டத்தின்[1] கீழ் வழங்கப்பட்ட பயிர்ச்செய்கைக் கடன்கள் (1978 டிசெம்பர் 31ல் உள்ளவாறு)

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| பயிர்ச் செய்கை ஆண்டு | வழங்கப்பட்ட கடன்கள் | | | மீளப் பெறப்பட்டவைகள் | | | மீளப் பெறப்பட்டவைகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | ஏனைய பயிர்கள் | எல்லாப் பயிர் களும் | நெல் | ஏனைய பயிர் கள் | எல்லா ப் பயிர் களும் | நெல் | ஏனைய பயிர் கள் | எல்லாப் பயிர் களும் |
| 1967/68 - 1969/70 | 180.1 | 19.4 | 199.5 | 128.6 | 15.3 | 144.1 | 71.4 | 79.9 | 72.2 |
| 1970/71 - 1972/73 | 88.2 | 24.8 | 113.0 | 57.2 | 19.0 | 76.2 | 64.8 | 76.6 | 67.4 |
| 1973/74 | 111.1 | 26.2 | 137.3 | 58.7 | 15.3 | 74.0 | 52.8 | 58.4 | 53.9 |
| 1974/75 | 85.6 | 27.3 | 112.9 | 43.6 | 15.5 | 59.1 | 50.9 | 56.8 | 52.3 |
| 1975/76 | 72.2 | 36.4 | 108.6 | 42.4 | 16.5 | 58.9 | 58.7 | 45.3 | 54.2 |
| 1976/77 | 98.8 | 78.8 | 177.6 | 43.6 | 21.3 | 64.9 | 44.1 | 27.0 | 36.5 |
| 1977/78 | 452 7 | 81.4 | 534.1 | 97.3 | 18.4 | 115.7 | 21.5 | 22.6 | 21.7 |
| மொத்தம் | 1,088.7 | 294.3 | 1,383.0 | 471.4 | 121.5 | 592.9 | 43.3 | 41.3 | 42.9 |
| 1978/79 [2] | 23.3 | 2.1 | 25.4 | 0.3 | ... | 0.3 | 1.3 | ... | 1.2 |

மூலங்கள்: மக்கள் வங்கி,
இலங்கை வங்கி,
வரையறுக்கப்பட்ட அட்டன் நெசனல் வங்கி.

1. 1973 வரை கடன்கள் புதிய கொடுகடன்கள் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. இதன்பின் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்கப்பட்டன. இது முந்திய திட்டத்தை மாற்றியமைக்கும் திட்டமாக விளங்கியது.
2. நிறைவற்ற தரவு பெரும்போகம் மட்டும்.

1977இலும் 1978 தொடக்கத்திலும் வழங்கப்பட்ட வேளாண்மைக் கடன்களின் மிகப்பெரிய அதிகரிப்பும் அதனுடன் இணைந்த திருப்பிக்கொடுக்கத் தவறிய மிகப்பெருந்தொகை அரசை 1978இல் அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் திட்டத்தை மாற்றியமைக்கச் செய்தன. 1978 சிறுபோகத்திற்கான கடன் கொடுக்கும் தகைமை இறுக்கப்பட்டது. 1978 சிறு போகத்திற்குக் கடன் பெறுவதற்காக, வேளாண்மையாளர்கள் 1977/78 பெரும் போகத்திற்கான கடன்களை முழுமையாக மீளளிப்பு செய்யவேண்டியிருந்தது. 1977/78 பெரும்போகத்திற்கு முற்பட்ட கடன்களுக்கு வெளிநிற்கும் கடன்களில் ஆகக் குறைந்தது 10 சதவீதம் கீழ்க்கொடுப்பனவாக செலுத்த வேண்டியிருந்தது. இந்நிபந்தனைகள் 1978/79 பெரும்போகத்திற்கும் தொடர்ந்து இருந்தன. இத்துடன் வேளாண்மையாளர்கள் பெரும்போகத்திற்குக் கடன் பெறுவதற்காக 1978 சிறுபோகக் கடன்களை முழுமையாகச் செலுத்த வேண்டியிருந்தது. இக்கட்டுப்பாடுகள் கடந்த ஆண்டின் கடன்களின் தளர்த்தப்பட்ட திட்டத்தை முற்றிலும் மாற்றி அமைக்கும் முறையில் இருந்தன.

மத்திய வங்கியினூல் செயற்படுத்தப்பட்டு வந்த கொடுகடன் உத்தர வாதத்தின் 75 சதவீதம் மீளப் பெறப்பட்டமை அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தில் ஏற்பட்ட முக்கிய மாற்றமாகும். இவ் உத்தரவாதம் 1967 இல் புதிய வேளாண்மை கொடுகடன் திட்டத்துடன் கொண்டுவரப்பட்டது. இவ் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கி களால் வழங்கப்பட்ட பயிர்ச் செய்கைக் கடன்களில் மீளப் பெறப்படாத தொகையின் 75 சதவீதம் அரசுக்குப் பதிலாக மத்திய வங்கியால் மீளளிக்கப்பட் டது. இத்திட்டம் பல ஆண்டுகளாக பயிர்ச் செய்கைக் கடன்களுக்குத் துணை நின்று ஊக்குவித்த போதிலும் அதேவேளையில் இத்தகைய உயர்ந்த வீத உத்தர வாதம் கடன்களை வழங்கிய வங்கிகள் அவற்றை மீளப் பெறுவதில் போதிய கவனம் செலுத்தாத நிலையை தோற்றுவித்தது போலும். உத்தரவாதம் இல்லா திருப்பின் அது வர்த்தக வங்கிகளை கடன் வழங்கும் பொழுது அதிகளவு முன் னெச்சரிக்கையுடன் இருக்கச்செய்திருக்கும். அத்துடன் அது 1977 மட்டங்களுக்கு முன்பிருந்த நிலைக்கு கணிசமான அளவு வேளாண்மைக் கொடுகடனில் குறிப் பிடத்தக்க சுருக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கும். இந்நிலையில் 1977 இறுதியில் வேளாண்மை கொடுகடனில் கொண்டுவரப்பட்ட சடுதியான தளர்த்தல் அறி வுடைய செயலாக அமையவில்லை. உண்மையில் தவறுன வகையில் பயன் படுத்தப்பட்ட கடன்கள் வழமையாக கடன் வழங்கும்போது கடைபிடிக்கும் வழிமுறைக்கு இவ் வேளாண்மைக் கொடுகடன் முறையையும் உட்படுத்தியது கடும் நடவடிக்கைபோல் தோன்றுகின்றது. ஆனூல், வர்த்தக வங்கிகள் ஒரு குறுகிய காலத்துக்குள் கொடு கடனை மேற்பார்வை செய்வதற்கு ஏற்ற வகையில் உத்தரவாதம் படிப்படியாக மீளப் பெறப்படின் ஏற்றதாக அமைந் திருக்கும்.

**நாணயக் கொள்கை**

கடந்த ஆண்டறிக்கையில் குறிப்பிட்டவாறு தொடர்ந்து இரண்டாவது ஆண்டில் ஏற்பட்ட மிகப் பெருமளவிலான நாணய விரிவாக்க சூழ்நிலைக்கு எதி ராக பல நாணய வழிமுறைகள் 1977இல் நடைமுறைப் படுத்தப்பட்டன. அவற்றில் வங்கி வீதத்தில் வர்த்தக வங்கி மத்திய வங்கியில் இருந்து பெறப்படும் கடனுதவிக்கான வட்டி வீதம் 1977 ஒகத்து 31 முதல் 10 சத வீதமாகவும், குறிக்கப்பட்ட எல்லைக்கு அப்பால் வைத்திருக்கும் இத்தகைய கடனுதவிகளுக்கான தண்டனை வீதம் 15 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டமை, 1977 திசெம்பர் 02 முதல் கைப்பணம் பெறும் வசதியை படிப்படியாகக் குறைத்து இல்லாமல் செய்தலும் இன்றியமையாதனவற்ற நோக்கங்களுக் காகவும் கடன் வழங்கல் உயர் தவணைக்கொள்வனவு ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடும் வங்கியல்லா கூட்டு நிலையங்களுக்கான முற்பணங்கள் மீது 1976இல் விதிக்கப்பட்ட உச்சவரம்பைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட் டமையும் முக்கிய நிகழ்ச்சிகளாகும். அவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட இன்னெரு முக்கிய கொள்கை வழிமுறையானது 1977 செத்தெம்பர் 07 முதல் தேசிய சேமிப்பு வங்கியின் வைப்புக்களுக்கான வட்டிவீதங்கள் கூடியளவு மேல் நோக்கி திருத்தி அமைக்கப்பட்டமைஆகும். இது வர்த்தக வங்கிகளின் வைப் புக்களின் அதிகரிப்புக்களுக்கும் வழங்கல் வீதங்களில் ஏற்பட்ட ஒரு அதிகரிப் புக்கும் தூண்டுதலாக அமைந்தது,

1978ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் மேற் கூறிய நாணயக் கொள்கைகளில் விரைவு படுத்தப்பட்ட வகையிலோ அல்லது தளர்த்தப்பட்ட தன்மையிலோ

எத்தகைய பெரிய மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. கடன் வழங்கல், உயர் தவணை கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் வங்கிகளல்லா கூட்டு நிலையங்கள் மூலதன கருவிகளுக்கான முதலீடு, புதிய வர்த்தக ஊர்திகள் ஆகியனவற்றிக்கு அளைவ வழங்கும் கடன் பொருட்டு, இக்கூட்டு நிலையங்களுக்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கொடுகடன் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. 1978 யூனிலிருந்து அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள் ஆகியவற்றுக்கான வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கல் மீது 1978 யூன் 28 அன்று வெளிநிற்கும் அத்தகைய கொடுகடன் மீது விதிக்கப்பட்ட முழு அளவிலான உச்சவரம்பின் வாயிலாக கட்டுப்படுத்தற்கான முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டது. எவ்வாருயினும் இது பல சிக்கல்களை அதிகரிப்பதற்கு வழிவகுத்ததுடன், இந் நிறுவனங்களின் அதிகரித்த கொடுகடன் தேவைகளை நிறைவு செய்வதற்காக இந்த உச்சவரம்பு பல வேளைகளில் மாற்றியமைக்கப் பட்டன. அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச் சபைகளுக் (நிதி, கடன் வழங்கும் நிறுவனங்கள் தவிர்ந்த) கான வர்த்தக வங்கி முற்பணங்களுக்கான இவ் உச்ச வரம்பு யூலை 13 முதல் 5 சதவீதத்தாலும், ஓகத்து 7 முதல் 12 சதவீதத்தாலும் மொத்தமாக 17 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டன. இது 1978 யூன் 28 இல் அத்தகைய முற்பணங்களின் மட்டத்திற்கு மேலாக அதிகரிக்கப்பட்டிருக்கலாம்.

முன்னர் குறிப்பிட்டவாறு தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து கிடைக்கக் கூடிய வசதிகளில் சில திருத்தங்கள் 1978 இல் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை, ஆண்டொன்றுக்கு 14.4 சதவீதத்தினைக் கொண்ட ஓர் ஆண்டுக்கான தவணை வைப்புக்களினதும், ஆண்டொன்றுக்கு 16.8 சதவீதம் கொண்ட 18 மாத வைப்புக்களினதும், (ஒவ்வொரு வைப்பிலும் ஆகக் குறைந்தது ரூபா 5,000 இருக்க வேண்டும் என்பதற்கமைய) மாதாந்த வட்டி கொடுப்பனவு களையும், புதிய தவணை வைப்புக்கள் மீதான (மாதாந்த வட்டி உட்படாத வை) வட்டி கொடுப்பனவினையும், முதிர்ச்சிக்கு முன்னதாக மீளப்பெறப்படும் வைப்புக்கள் மீது, அத்தவணை வைப்புக்கள்பேணப்பட்ட காலப்பகுதிக்கு ஏற்றதாக மாறிவரும் வீதங்களிலான வட்டி கொடுப்பனவினையும் உள்ள டக்கும்.

முன்பு கூறப்பட்டவாறு, இலங்கையின் நாணய விரிவாக்க வீதம் கணி சமான அளவில் திருந்தியமைக்கு 1978 ஆம் ஆண்டு சான்ருக அமைகிறது. ஆண்டு நாணய விரிவாக்கம் 1978 சனவரியில் 35 சதவீதத்திலிருந்து வீழ்ச்சி யடைந்து 1978 திசெம்பரில் 11 சதவீதம் கொண்ட எல்லையை அடைந்தது. ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கையானது நாணய விரிவாக்க வீதத்தினை மிதமாக்க பெரு மளவில் உதவியமைக்குச் சான்று உண்டு. இருப்பினும், குறைந்த விரைவான நாணய விரிவாக்கத்திற்கு அரச நிதி தொழிற்பாடுகள் அடிப்படைக் காரணி யாக விளங்கின. வங்கித் தொழில்முறையில் வங்கியல்லாத் தனியார் துறை யில் தவணை, சேமிப்பு வைப்புக்கள் கணிசமாக அதிகரிக்கப்பட்டமையும், இது இத்தகைய வளர்ச்சிக்கு ஏதுவான மிகவும் குறிப்பிடத்தக்கதொரு காரணி யும் ஆகும். மொத்தத்தில் ஆண்டுக் காலப் பகுதியில் வர்த்தக வங்கிகளுட ஞன வங்கியல்லாத,தனியார்துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் ரூ. 16,050 இலட்சத்தால் அதிகரித்தன இது, பணவீக்கத் தாக்கங்கள் அதிகரிக்காதவாறு வர்த்தக வங்கிகள் தனியார் துறையினரின் கொடுகடன் தேவைகளில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பை ஈடுசெய்வதற்கு துணைநின்றது. இதன் விளைவாக, ஆண் டுக் காலப்பகுதியில் தனியார்துறைக்கான வங்கிக்கொடுகடனில் ஏற்பட்ட என்று

மில்லா ரூ. 30,260 இலட்ச அதிகரிப்பிற்கு மாறாக, இத்துறையினது செயலாற்றத்தின் பணவீக்கத் தாக்கம் ரூபா 6,880 இலட்சமாக தொடர்ந்திருந்தது. அத்துடன் கைப்பண சலுகைகள் போன்ற நாணய மட்டம் மீளப் பெறப்பட்டமை மத்திய வங்கி, வர்த்தக வங்கிகளிடமிருந்து கணிசமான அளவு நிதியினை ஈர்ந்தெடுத்துக்கொள்ள வழிவகுத்தது. இல்லாவிடின் அவை கொடுகடன் விரிவாக்கத்தினை ஏற்படுத்த அடிப்படையாக விளங்கியிருக்கலாம். மத்திய வங்கியிடமிருந்து மீண்டும் மிகுதியான அளவில் கடனைப் பெறுதவாறு தண்டனை வீதத்தின் செயற்பாடு வர்த்தக வங்கிகளைத் தடுத்தது.

1977 இல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட நாணயக் கொள்கை 1978 இலும் தொடர்ந்திருந்தது என்பதையும், இந்த ஆண்டில் நாணய விரிவாக்க வீதம் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருந்தது என்பதையும் நாணய விரிவாக்க வீதத்தின் மிகவிரும்பத்தக்க வீழ்ச்சி மேலும் தள்ளப்பட்டிருக்கக்கூடும் என்பதை மேல் கூறப்பட்டவை காட்டுகின்றன. 1977 இற்கான நாணயக் கொள்கையின் அடிப்படை கோட்பாடும் அது 1978 இல் தொடர்ந்திருந்தமையும் இப் பின்னணிக்கு எதிராக நோக்கப்படவேண்டியிருக்கின்றது. கொடுகடன் கிடையாத் தன்மையும் அதற்கான மிகக் கூடிய செலவினத்தையும் பற்றி பல்வேறு முறைப்பாடுகள் இருந்தன. முன் சொல்லப்பட்டது நடைமுறையில் இருந்த கொடுகடன் கட்டுப்பாடுகளினுல் ஏற்பட்டதாக இருக்கலாம் ஆனால், 1978 இல் கொடுகடனில் ஏற்பட்ட கணிசமான விரிவு பொருளாதாரத்தின் கொடுகடன் தேவைகளை வங்கித் தொழில் முறை எதிர்கொள்ள முடியுமென்பதைக் காட்டுகின்றது. கொடுகடன் பெறுவதற்கான கூடிய செலவுபற்றிய முறைப்பாடுகள் குறைந்த செலவில் கொடுகடன் பெற்று பழக்கப்பட்டவர்களிடமிருந்து எழும்கருத்தாகத் தெரிகிறது. 1976 இலிருந்து வரும் தொடர்ச்சியான இரு புள்ளிகளில் பணவீக்கம் ஏற்பட்ட பின்னணியின் முக்கிய காரணிகளான சேமிப்பு ஊக்குவித்தல்கள், மூலவளங்கள் திரட்டல் ஆகியவற்றை பாதிக்காத வகையில் எவ்வாறு மலிவான நாணயக் கொள்கைகளை உருவாக்க முடியுமென்பதை எண்ணிப்பார்க்க முடியாததாய் உள்ளது. பணவீக்கப் பிடியிலிருந்து தன்னை விடுவிப்பதற்கும் நிலையான பொருளாதார வளர்ச்சியை உருவாக்க தேவையான நாணயத்தின் நிலையான தன்மையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும், நடைமுறையிலுள்ள குறுங்கால உயர்வட்டி வீதக் கொள்கைகளை நாம் கடைப்பிடித்தேயாக வேண்டியுள்ளது.